DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 162/2022
*****

Deposition of Witness for Prosecution witness No: PW4

LW2

| | | |
|---|---|---|
| Name | : | **அருணாசலம்** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 04.08.2026 |

**( Accused present. )**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் புளியங்குடி செக்கடி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 02.10.2017 ஆம் தேதி 12 மணிக்கு புளியங்குடி காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற எண்.439/2017 பிரிவு 294(பி), 307, 506(2) IPC வழக்கின் சம்பவ இடமான புளியங்குடி மேலமந்தை குத்தூஸ் கடை பக்கம் உள்ள இடத்தையும், அதனை சுற்றியுள்ள இடத்தையும்

சம்பவ இட சாட்சிகளான என் முன்பும் புளியங்குடி அரசு மருத்துவமனை தெரு திருவேட்ட நல்லூர் திருமலைவேலு மகன் முத்துக்குமார் என்பவரும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 162/2022
*****

Deposition of Witness for Prosecution witness No: PW5

LW7

| | |
|---|---|
| Name | : பெரியசாமி |
| Father`s Name | : சிவலிங்கம் |
| Village | : புளியங்குடி |
| Taluk | : சிவகிரி |
| Calling | : விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | : 59 |
| Date | : 04.08.2026 |

**( Accused present. )**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் புளியங்குடி இந்திரா காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 02.10.2017 அன்று மாலை 03.00 மணிக்கு நானும் சாட்சி முத்துப்பாண்டியும் புளியங்குடி ஆரியங்காவு கருப்பசாமி கோவில் அருகில் நின்று கொண்டிருந்தாகவும், அப்போது ஆஜர் எதிரியை புளியங்குடி போலிசார் எதிரியை கைது செய்ததாகவும், அப்போது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் முத்துப்பாண்டியும் கையொப்பம் செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியபடி அன்றைய தினம் மாலை 6.15 மணிக்கு வழக்கில் சாட்சி மணிகண்டனை வெட்ட பயன்படுத்திய அரிவாளை என் முன்னிலையில் கைப்பற்றி அந்த அத்தாட்சியில் நானும் முத்துப்பாண்டியும் கையொப்பம் செய்ததாகவும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.